මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
DEPARTMENT OF MUSLIM RELIGIOUS AND CULTURAL AFFAIRS
තැපැල් පෙට්ටිය 543, අංක 180, ටී.බී. ජයා මාවත, කොළඹ 10.
தபால் பெட்டி 543, இல. 180, ரி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.
P.O. Box 543, No. 180, T.B. Jayah Mawatha, Colombo 10.
E-mail : director@muslimaffairs.gov.lk
Web : www.muslimaffairs.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No — DMRCA/H/GEN/2026 | ඔබේ අංකය / உமது இல. / Your No — | දිනය / திகதி / Date — 16-06-2026

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு.

**ஹஜ் – 2027 ஆம் ஆண்டு ஹஜ் பயணிகள் பதிவு தொடர்பான அறிவித்தல்**

புனித ஹஜ் – 2027 இல் பங்கேற்க விரும்பும் இலங்கை முஸ்லிம் யாத்திரீகர்களுக்கான ஹஜ் பதிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இப்பதிவு இணையவழி (Online) மூலம் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கின்றோம்.

02.இதன்படி, 2027 ஆம் ஆண்டில் ஹஜ் கடமையை நிறைவேற்ற விரும்பும் அனைத்து யாத்திரீகர்களும் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:

- இலங்கை முஸ்லிமாக இருத்தல்.
- 15 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் (விசா வழங்கப்படும் இறுதித் திகதியான 09.03.2027 அன்று).
- 2026 ஆம் ஆண்டில் ஹஜ் கடமையை நிறைவேற்றாதவராக இருத்தல்.

03. திணைக்களத்தினால் வழங்கப்படும் இணையவழி (Online) இணைப்பினூடாக அல்லது QR குறியீட்டை (QR Code) ஸ்கேன் செய்து பதிவினை மேற் கொள்ளும் போது சரியான **தேசிய அடையாள அட்டை (NIC) மற்றும் தொலைபேசி இலக்கத்தையும்** வழங்கி பதிவினை மேற் கொள்வதுடன் தொடராக தங்களது குடும்ப அங்கத்தினர்களையும் அதில் பதிவு செய்து கொள்ளலாம். அத்துடன் 15 வயது பூர்த்தியாகி அடையாள அட்டை இலக்கம் பயன்படுத்த முடியாத சிறுவர்களது **பிறந்த திகதியினை** வழங்கி பதிவினை மேற் கொள்ள முடியும்.

04. இப்பதிவிற்குப் பயன்படுத்தப்படும் தொலைபேசி இலக்கத்திற்கே திணைக்களத்தினால் வழங்கப்படும் ஹஜ் தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் தகவல்கள் குறுஞ்செய்தி (SMS) மூலம் அனுப்பப்படுவதனால், பதிவு செய்யும் நபரின் **தனிப்பட்ட தொலைபேசி இலக்கம்** மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

05. குறிப்பாக **ஹஜ் முகவர்கள் அல்லது இடைத்தரகர்கள்** மூலம் தங்களது ஹஜ் பதிவுகளை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
DEPARTMENT OF MUSLIM RELIGIOUS AND CULTURAL AFFAIRS
තැපැල් පෙට්ටිය 543, අංක 180, ටී.බී. ජයා මාවත, කොළඹ 10.
தபால் பெட்டி 543, இல. 180, ரீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.
P.O. Box 543, No. 180, T.B. Jayah Mawatha, Colombo 10.
E-mail : director@muslimaffairs.gov.lk
Web : www.muslimaffairs.gov.lk

06. மேலும், 2026 ஆம் ஆண்டிற்கான ஹஜ் பதிவின் போது ரூ. 5,000/- பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியிருந்தும் ஹஜ் பயணத்தை மேற்கொள்ளாத விண்ணப்பதாரர்கள், தங்களது சரியான தகவல்களை வழங்கி மீண்டும் பதிவு செய்ய வேண்டும். எனினும், அவர்கள் பதிவுக் கட்டணம் ரூ. 5,000/- செலுத்தத் தேவையில்லை. அத்துடன் அவர்களது கடந்த வருட பதிவு இலக்கமே மீள் பதிவிலக்கமாக வழங்கப்படும்.

07. மேலதிக தகவல்களுக்கு **0112667901** / **0112667909** எனும் இலக்கத்தினூடாக ஹஜ் பிரிவை தொடர்பு கொள்ளவும்

அல்லாஹ் தஆலா அனைவருக்கும் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்.

**பணிப்பாளர்**
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

**தலைவர்**
ஹஜ் மற்றும் உம்ரா கமிட்டி

குறிப்பு : தங்களது பதிவினை இங்கு வழங்கப்பட்டுள்ள முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள வலைத்தளம் (website) அல்லது QR குறியீட்டை (QR Code) ஸ்கேன் செய்தும் மேற்கொள்ள முடியும்.

**Face book** : Department of Muslim Religious and Cultural

QR Code

**Website**: muslimaffairs.gov.lk → Hajj Registration